**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S 390/2018

வா.சா 2 கிருஷ்ணசாமி

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணசாமி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 27.03.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி தரப்பில் அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் புளியரையில் குடியிருந்து வருகிறேன். என் தகப்பனார் பெயர் நாராயணசாமி நாயுடு ஆகும். நான் குடியிருந்து வரும் வீட்டின் கதவு எண்.2.2.70 ஆகும். நான் பிறந்ததில் இருந்தே இதே முகவரியில் தான் குடியிருக்கிறேன். அதே தெருவில் உள்ள முத்துசாமி நாயுடு மகன் சுப்பையா நாயுடு என்பவரை எனக்கு தெரியும். சுப்பையாவிற்கு 3 மகன்கள், ஒரு மகள் உள்ளார். அவரது 3 மகன்களின் பெயர் இருளாச்சி நாயுடு, சங்கரையா நாயுடு, முத்துசாமி ஆகியோர்கள் ஆவார்கள். மகள் பெயர் லெட்சுமி ஆகும். வழக்கு தாக்கல் செய்துள்ள ராமலட்சுமி, அவரது கணவர் முத்துசாமி ஆகியோர்களை தெரியும். வழக்கின் பிரதிவாதி ராமதாஸ், மற்றும் அவரது சகோதரிகளை தெரியும். வாதி முத்துசாமி அப்பாவை நேரடியாக நான் பார்த்துள்ளேன். வழக்கின் பிரதிவாதி ராமதாஸின் தகப்பனாரை நேரடியாக பார்த்துள்ளேன். வழக்கின் 1 வது வாதியின் அப்பா சுப்பையா நஞ்சை, புஞ்சை, வீடுகளை பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளார். சுமார் 10 முதல் 15 வருடத்திற்கு முன்னர் அந்த உயிலை எழுதி வைத்தார். அந்த உயில் ஆவணத்தை எழுதி வைக்க சுப்பையா தான் தகவல் சொன்னார். உயில் எழுதும் போது நான் பதிவு அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அந்த உயில் ஆவணத்தில் சுப்பையா கையெழுத்து செய்ததை நான் பார்த்தேன். சுப்பையா கையெழுத்து

செய்தபிறகு நான் முதலிலும், 2 வதாக நாராயணன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்பட்ட வா.சா.ஆ 2 உயிலில் முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். 2 வது சாட்சியாக நாராயணன் கையெழுத்து செய்தார். அவர் இறந்து விட்டார். உயில் ஆவணம் எழுதும் போது சுப்பையாவிற்கு வயது 65 இருக்கும். உயில் ஆவணம் எழுதும் போது சுப்பையா நல்ல மனநிலையில் இருந்தார். உயில் ஆவணம் எழுதி வைத்த சுப்பையா விபத்தில் இறந்து விட்டார். உயில் ஆவணத்தின்படி கிடைத்த சொத்துக்களை பொறுத்து அதில் சொல்லப்பட்டுள்ள 3 நபர்கள் அனுபவித்து வருவதாக தெரியும். உயில் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் பூர்வீகமாகவும், கிரையம் வாங்கிய சொத்துக்களாகும். அந்த உயில் பதிவு செய்யப்பட்டது. நான் கையெழுத்து செய்ததை சுப்பையா பார்த்தார்.

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் விவசாயம் செய்கிறேன். நான் நிலம் வாங்க, விற்க இடைதரகராக செயல்பட்டுள்ளேனா என்றால் இல்லை. பத்திரங்களை படித்து தெளிவுபடுத்த எனக்கு கற்றறிவு உள்ளது. எந்த சர்வே எண்ணில் உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் புல எண் ஞாபகமில்லை. நான் ஞாபகமில்லை என வாதிக்கு சார்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் ஆவணமானது தற்போது இருளாச்சி நாயுடு உள்ள புல எண்.571/7 க்கு பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியும். என்ன சொத்துக்களுக்கு உயில் எழுதப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது. வாதி முத்துசாமிக்கு நான் தாய்மாமா முறையாவேன். எனது மூத்தசகோதரி பெயர் வசந்தா ஆகும். எனது அக்கா வசந்தா இறந்து 20 வருடம் இருக்கும். சரியான தேதி தெரியாது. உயில் ஆவணம் எழுதுவதற்கு 2 ஆண்டுகள் முன்பு இருந்தே வாதி ராமலட்சுமி அவரது தாயார் அய்யம்மாள் வீட்டில் உள்ளார் என்றால் சரிதான். சுப்பையாவின் முழு சொத்து விபரம் சுப்பையாவிற்கு தெரியுமா, அல்லது ராமலட்சுமிக்கு தெரியுமா என்றால் ராமலட்சுமியின் கணவருக்கும் தெரியும். ராமலட்சுமிக்கு சொத்து விபரம் தெரியாது. சுப்பையாவிற்கு பிறகு அந்த சொத்துக்களை பற்றி இருளாச்சி நாயுடுக்கு மட்டுமே தெரியும் என்றால் சரிதான். இருளாச்சியின்

பராமரிப்பில் சுப்பையா கடைசி காலம் வரை இருந்தார் என்றால் சரிதான். 8.2.2017 ல் வாதி குடும்பத்தார் 2 ம் பிரதிவாதியிடமும், 2 ம் பிரதிவாதி சகோதரர்களிடமும் கிரைய வாங்கிய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் செய்தேன். வா.சா.ஆ 9, பி.வா.சா.ஆ 5 ஆகிய ஆவணங்களில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். உயில் ஆவணம் பக்கம் 7 ல் இரண்டு ஆவணங்களின் அடிப்படையில் முத்துசாமிக்கு 2 செண்ட் சொத்தை கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். உயிலில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ள 2 செண்ட் இடத்திற்கு போடப்பட்ட சர்வே எண் தவறு என்றால் அவ்வாறு தான் சொல்கிறார்கள். உயில் ஆவணம் கதவு எண்.2.2.75 என்ற நம்பருக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த வீட்டில் இருந்ததால் எழுதி கொடுத்துள்ளார். அந்த வீட்டிற்கு சர்வே எண்.571/11 க்கு மேற்கே என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயிலில் கதவு எண்.2.2.75 என்ற வீட்டிற்கு எழுதப்பட்ட நான்கு எல்கைகள் அனைத்தும் தவறாகவும், மோசடியாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாதி அழைத்து தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். வாதி முத்துசாமி என் மருமகன் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என் சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)
தென்காசி.